RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 138 | மே.26 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “பாலியல் குற்றங்களைத் தடுக்கும் விதமாக தண்டனைகள் இருக்க வேண்டும்” : முதல்வர் விஜய் அறிவுறுத்தல்

சென்னை: மே.26-

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக, முறையாக நடத்தி, கடும் தண்டனை பெற்றுத் தருவது குற்றச் செயல்களில் ஈடுபடத் திட்டமிடுவோரைத் தடுக்கும் விதமாக இருக்க வேண்டும் என்று அரசு ஆய்வுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் விஜய் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் விஜய் தலைமையில் நேற்று (மே 25) தலைமைச் செயலகத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், வழக்குகளை விரைவுபடுத்துவது குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும் காவல் துறை, சமூக நலத் துறை மற்றும் அரசு தலைமை வழக்கறிஞருடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக நடத்தி, குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர முதல்வர் வலியுறுத்தினார். வழக்குகளை முறையாக நடத்தி, கடும் தண்டனை பெற்றுத் தருவது குற்றச் செயல்களில் ஈடுபடத் திட்டமிடுவோரைத் தடுக்கும் விதமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் முனைவர் மு.சாய்குமார், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் மரியம் பல்லவி பல்தேவ், காவல் துறை தலைமை இயக்குநர் டாக்டர் சந்தீப் ராய் ரத்தோர், காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) முனைவர் மஹேஷ்வர்



தயாள், காவல் துறை கூடுதல் இயக்குநர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) அனிதா ஹுசைன், காவல் துறை தலைவர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) சி. ராஜேஸ்வரி, காவல் துறை தலைவர் (நுண்ணறிவு) ஆஸ்ரா கர்க், காவல் துறை தலைவர் (சிங்கப்பெண்) கே.பவானீஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதிரவைத்த கோவை சம்பவம்:

கோவை மாவட்டத்தில் வசித்து வந்த தம்பதியின் 10 வயது மகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், போக்குவரத்து அமைச்சர் பார்த்திபன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைஅமைச்சர் சம்பத்குமார் சேலம் மாவட்டத்தில் நேற்று சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் கூறினர். போக்சோ நீதிமன்ற உத்தரவின்பேரில், தமிழக அரசு சார்பில் ரூ.7 லட்சத்துக்கான காசோலையை வழங்கினர்.

இந்தச் சம்பவத்துக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்தன. குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான திமுக கடும் கண்டனங்களை பதிவு செய்தது.

திமுக எம்.பி. கனிமொழி, “குழந்தைகள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் என யாருக்கும் பாதுப்பில்லாத மாநிலமாகிவிட்டது தமிழ்நாடு. சட்டம் ஒழுங்கு கடுமையாக சீர்குலைந்துள்ளதை, இந்த புதிய அரசு அறிந்துள்ளதா என்பதே சந்தேகமாகவுள்ளது” என்று பதி விட்டிருந்தார்.

இந்நிலையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், வழக்குகளை விரைவுபடுத்துவது குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும், காவல் துறை, சமூகநலத் துறை மற்றும் அரசு தலைமை வழக்கறிஞருடன் முதல்வர் விஜய் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.



## அதிமுக எம்எல்ஏக்கள் 3 பேர் ராஜினாமாவுக்குப் பின் தவெகவில் ஐக்கியம்

சென்னை: மே.26-

வேலுமணி தரப்புக்கு ஆதரவாக இருந்த அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்யபாமா ஆகிய மூவரும் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அமைச்சர் ஆதவ் அர்ஜுனா முன்னிலையில் தவெகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதிமுகவின் உட்கட்சிப் பூசல் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அக்கட்சியின் எம்எல்ஏக்கள் மூன்று பேர் தங்களது எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்து, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேலுமணி தரப்புக்கு ஆதரவாக இருந்து வந்த மதுராந்தகம் எம்எல்ஏ மரகதம் குமரவேல், பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார், தாராபுரம் எம்எல்ஏ சத்யபாமா ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர். சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை சந்தித்து 3 எம்எல்ஏக்களும் ராஜினாமா கடிதங்களை வழங்கினர்.

ஆய்வு செய்து ராஜினாமா ஏற்பு குறித்து அறிவிக்கப்படும் என சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரி வித்துள்ளார்.

ராஜினாமா கடிதத்தை அளித்த கையோடு, மூவரும் பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதிமுக ஏற்கெனவே இரண்டு அணிகளாக பிரிந்து கிடக்கும் நிலையில், வேலுமணி அணியைச் சேர்ந்தவர்கள் அடுத்தடுத்து கட்சியை விட்டு வெளியேறுவது, அக்கட்சியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

காலியாகும் தொகுதிகள்:

அதிமுக எம்எல்ஏக்கள் 3 பேர் ராஜினாமா செய்துள்ள நிலையில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 230 ஆக குறையும். ஏற்கெனவே திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை முதல்வர் விஜய் ராஜினாமா செய்த நிலையில், இந்த ராஜினாமாக்கள் ஏற்கப்பட்டால் 4 தொகுதிகள் காலியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிஜேபி விவகாரம்: உணர்ச்சிவசப்பட வேண்டாம் என தலைமை நீதிபதி அறிவுரை

புதுடில்லி: மே.26-

சிஜேபி எனப்படும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி தொடர்பாக வழக்கறிஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு எதிர்வினையாற்ற வேண்டாம் என தலைமை சூர்யகாந்த் கூறியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், வழக்கு ஒன்றை விசாரித்த சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சூர்யகாந்த், வேலையில்லாத இளைஞர்கள் சிலர் கரப்பான்பூச்சிகள் போன்று மீடியா, சமூகஊடகங்களில் ஊடுருவி நீதித்துறையை ஒட்டுண்ணி போல் தாக்கி வருவதாக வாய்மொழியாக கூறினார். இது சர்ச்சையை ஏற்படுத்தியது. இது தொடர்பாக விளக்கமளித்த சூர்யகாந்த், தனதுகருத்து தவறாக திரித்து கூறப்பட்டுள்து. போலியாக மற்றும் பொய் பட்டம் பெற்றவர்களை தான் கூறியதாகவும், இளைஞர்களை விமர்சிக்கவில்லை என தெளிவுபடுத்தினார்.

இதனைத் தொடர்ந்து ஆன்லைனில் காக்ரோச் ஜனதா கட்சி( சிஜேபி) என்ற பெயரில் கட்சி துவங்கப்பட்டது. இந்த பக்கத்தை தடை செய்யும்படி மத்திய அரசு கூறியுள்ளது.

இந்நிலையில், நீதிமன்றத்தில் வாய்மொழியாக கூறியதை வைத்து வர்த்தக ரீதியில் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சிஜேபி நடவடிக்கைகள் குறித்தும் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனக்கூறி சுப்ரீம் கோர்ட்டில் பொது நல மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி சூர்யகாந்த், ஜாய்மால்யா பக்ஷி மற்றும் விஎம் பஞ்சோலி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

வழக்கறிஞர் என்கே கோஸ்வாமி வாதாடுகையில், ஆன்லைன் செயல்பாட்டால் நீதித்துறையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுகிறது எனத் தெரி வித்தார்.

அப்போது தலைமை நீதிபதி இதனை உணர்ச்சிப்பூர்வமாக எடுத்துக்கொண்டு எதிர்மறை வினையாற்ற வேண்டாம் எனத் தெரி வித்தார்.

## தூத்துக்குடி பள்ளி மாணவி பாலியல் படுகொலை வழக்கில் தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு தண்டனை

தூத்துக்குடி: மே.26-

குளத்தூர் அருகே வேடநத்தம் பள்ளி மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு தண்டனை விதித்து தூத்துக்குடி போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் அருகே வேடநத்தத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளியின் 17 வயது மகள், அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். கடந்த மார்ச் 10ம் தேதி இரவு வீட்டை விட்டு வெளியே சென்ற மாணவி மீண்டும் வீடு திரும்பவில்லை. மறுநாள் (மார்ச் 11) மாலை கிராமத்துக்கு அருகே காட்டுப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். இதையடுத்து மாணவியை கொலை செய்தவர்களை கைது செய்ய வலியுறுத்தி, கிராம மக்கள் உட்பட பல்வேறு அமைப்புகள், கட்சியினர் மறியல் போராட்டம் நடத்தினர்.

போலீஸார் 10 தனிப்படைகள் அமைத்து தேடுதல் பணியில் ஈடுபட்டனர். இதில், ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த முனியசாமி மகன் மாவீரன் என்ற தர்ம முனீஸ்வரன் (37) என்பவரை மார்ச் 19ம் தேதி பிடித்து விசாரணை நடத்தினர். இதில் அவர்தான் மாணவியை கொலை செய்தது தெரிய வந்தது.

இது தொடர்பான வழக்கு தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கு விசாரணை முடிவடைந்த நிலையில் இன்று (மே 25) தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக மதுரை மத்திய சிறை யிலிருந்து பாதுகாப்புடன் தர்ம முனீஸ்வரனை போலீஸார் அழைத்து வந்து தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தினர்.

நேற்று காலை 11 மணியளவில் இந்த வழக்கில் தர்ம முனீஸ்வரன் குற்றவாளி என்று நீதிபதி





பிரீத்தா தீர்ப்பளித்தார். அவருக்கு விதிக்கப்படும் தண்டனை விவரங்களை பிற்பகல் 12.45 மணிக்கு அறிவிப்பதாக தெரி வித்திருந்தார்.

அதன்படி மீண்டும் பிற்பகல் 12.45 மணிக்கு நீதிமன்றம் தொடங்கியதும் நீதிபதி பிரீத்தா தண்டனை விவரங்களை வாசித்தார். அவர் கூறுகையில், “குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு 17 வயதில் மகள் உள்ளார். அவருடைய மனைவியும், மகளும் அவரை பிரிந்து வாழ்கின்றனர். மகள் வயது பிள்ளையை பார்க்கும் போது அவளை பாதுகாக்க வேண்டும் என்ற மனது குற்றவாளி தர்மமுனீஸ்வரனுக்கு இல்லை. அவளை பாதுகாக்கத் தவறி மிருகத்தனமாக நடந்துள்ளார்.

இந்தக் குற்றத்தை செய்யும் போது அவருக்கு மகள் நினைவு வராதது, வேதனையளிக்கிறது. குற்றவாளியை நம்பி அவருடைய தாய் மட்டும் அவருடன் உள்ளார். குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்குவது முறையாக இருக்காது. அதனால் குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு பாலியல் வன்கொடுமை, கொலை ஆகியவற்றுக்கு சேர்த்து இரட்டை தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளிக்கிறேன்.

தண்டனையை குறைக்க ஏதாவது ஒரு காரணம் இருக்குமா என்று பார்த்தேன். ஆனால் இல்லை. மேலும் இரட்டை தூக்கு தண்டனையோடு மேலும் ஓராண்டு சிறை தண்டனையையும் சேர்த்து விதிக்கிறேன். இதில் அவர் ஏற்கெனவே அனுபவித்த சிறைத் தண்டனை காலத்தை கழித்துக் கொள்ளலாம்,” என்றார்.

வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு

இந்த வழக்கில் அரசு தரப்பில் ஆஜரான சிறப்பு வழக்கறிஞர் எல்லம்மாள் கூறுகையில், “இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட தர்ம முனீஸ்வரன் பிரிவு 104 பி.என்.எஸ். சட்டத்தின்படி தூக்கு தண்டனையும், பிரிவு 6 போக்சோ சட்டத்தின்படி தூக்கு தண்டனையும், பிரிவு 127(2) பி.என்.எஸ். சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனையும் வழங்கி தீர்ப்பு கூறியுள்ளார். இது வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பாகும்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவியின் பிரேத பரிசோதனைபோது சேகரிக்கப்பட்ட தடயங்களும், குற்றம்சாட்டப்பட்டவரின் ரத்த மாதிரிகளும் உள்ள டி.என்.ஏக்கள் ஒரே மாதிரியாக இருந்ததையடுத்து, அந்த அறிக்கையின் அடிப்படையில் அவர் மீதான குற்றம் சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாக அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் இருந்தே இந்த வழக்கில் காவல் துறையினர் துரிதமாக செயல்பட்டதால் தான் 10 நாட்களுக்குள் சூழ்நிலை சாட்சியங்கள், அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்,” என்றார்.

76 நாளில் தீர்ப்பு

தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை தொடங்கிய 76வது நாளில் இரட்டை தூக்கு தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த மார்ச் 10ம் தேதி மாணவி கொலை செய்யப்பட்டார். குற்றப்பத்திரிகை விரைவாக தாக்கல் செய்யப்பட்டு ஏப்ரலில் இந்த வழக்கின் விசாரணை தொடங்கியது. மே 21ம் தேதி விசாரணை நிறைவடைந்தது. நேற்று தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஆயுள் தண்டனை

கடந்த 2020ம் ஆண்டு பிப்.2 ம் தேதி தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே கீழஈரால் பகுதியில் பாப்பா (65) என்ற மூதாட்டியிடம் நகைகளை திருடி பாலியல் துன்புறுத்தல் செய்து கொலை செய்த போலீஸார் தர்ம முனீஸ்வரனை கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் நடந்தது. இதில், கடந்த ஆண்டு தர்ம முனீஸ்வரனுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு, அவருக்கு கடந்த ஆண்டு டிச.18ல் ஜாமீன் கிடைத்துள்ளது. அதனை தொடர்ந்து, உயர் நீதிமன்ற உத்தரவுப்படி டிச.24ம் தேதியில் இருந்து தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் கையெழுத்திட்டு வந்துள்ளார்.

இதற்காக அவர் சாயல்குடியில் இருந்து வேடநத்தம் வழியாக குறுக்குச்சாலை வழியாகவே தூத்துக்குடி வந்து சென்ற போது தான், வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்துள்ளார் என்பது போலீஸார் விசாரணையில் தெரிய வந்தது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**





■ கிருஷ்ணகிரி ரு சேலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள "மாலிக் LIFE CARE" பல்நோக்கு மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது. இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் கலந்து கொண்டு மருத்துவமனையை திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். விழாவில் மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு புதிய மருத்துவமனை தொடக்கத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்தனர். புதிய மருத்துவமனை மூலம் அப்பகுதி மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகள் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டது.

## செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மதிமுக சார்பில் செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்

குரோம்பேட்டை மே.26-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை அருகே தனியார் திருமண மண்டபத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மதிமுக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் படப்பை செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் மதிமுக மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இந்த கூட்டத்தில் தீர்மானமாக சீம கருவேலை மரங்களை அகற்ற செங்கல்பட்டு வடக்கு மாவட்டத்திற்கு வருகை தரும் மதிமுக தலைவர் ஐயா வைகோ அவர்களே சிறப்பாக வரவேற்பு அந்த நிகழ்ச்சி நடத்துவது என்றும் .

எதிர்வரும் நாடாளுமன்ற மாநில அவை தேர்தலில் தலைவர் ஐயா வைகோ அவர்களை தமிழக அரசு தமிழகத்தில் மூத்த



அரசியல் தலைவர் என்ற அடிப்படையிலும் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலும் பொது வேட்பாளராக அறிவித்து அவரை நாடாளுமன்றம் அனுப்பி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் இன்று இயற்றினார்கள் கூட்டத்தில் மாவட்டத் துணை செயலாளர்கள் முடிச்சூர் ஜெயசீலன், மாங்காடு முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஏ.கே.வேல்முருகன், பெருங்குளத்தூர் கோபிநாத், மற்றும் ஒன்றிய நகர பகுதி கழக செயலாளர் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.





## வலம்புரி விநாயகர், மாரியம்மன் கோவில் மஹா கும்பாபிஷேகம் கோலாகலம்

கிருஷ்ணகிரி, மே.26-


கிருஷ்ணகிரி ஒன்றியம் சாப்பரம் ஊராட்சிக்குட்பட்ட குட்டிகவுண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள வலம்புரி விநாயகர் மற்றும் மாரியம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக விழா இன்று கோலாகலமாக நடைபெற்றது.

இதனை முன்னிட்டு கடந்த சில நாட்களாக முளைப்பாரி இடுதல், கொடியேற்றம், கங்கணம் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், தென்பெண்ணை ஆற்றில் இருந்து புனிதநீர் எடுத்து வந்த பக்தர்கள் ஊர்வலமாக கோவிலுக்கு கொண்டு வந்து வழிபாடு நடத்தினர்.

இன்று அதிகாலை இரண்டாம் கால யாக வேள்வி, 108 மூலிகை ஹோமம் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து வலம்புரி விநாயகர் மற்றும் மாரியம்மன் கோவில் கோபுர கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது.

பின்னர் மூலவர்களுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர் மற்றும் கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.





■ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏரிகளில் இருந்து வண்டல் மண், களிமண் மற்றும் கிரவல் மண் ஆகியவை விவசாய பயன்பாட்டிற்காக இலவசமாக வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார். நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களுக்கு குறிப்பிட்ட அளவில் மண் வழங்கப்படும் என்றும், மண்பாண்ட தொழிலாளர்களுக்கும் சலுகை அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தேவையான ஆவணங்களுடன் tnesevai.tn.gov.in இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம், அரசினர் விருந்தினர் மாளிகையில் உள்ள கூட்டரங்கில் உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் தலைமையில் மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,மாநகர காவல் ஆணையாளர் அபிஷேக் தீக்சித்,இ.கா.ப.,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் இ.கா.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.தங்கபாண்டி அ.கல்லாணை , சோ.கார்த்திகேயன் ஆகியோர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.

## ஜோலார்பேட்டை அத்தலட்டிக் கிளப் மற்றும் ஸ்போர்ட்ஸ் வில்லேஜ் தடகளப் பயிற்சி கோடை முகாம் நிறைவு விழா சபரி குமார் தலைமையில் நடைபெற்றது

திருப்பத்தூர், மே.26-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சிறு விளையாட்டு அரங்கில் ஜோலார்பேட்டை அத்லடிக் கிளப் மற்றும் ஸ்போர்ட்ஸ் வில்லேஜ் தடகளப் பயிற்சி பள்ளி கோடை முகாம் மே மாதம் முழுவதும் 80 மாணவ மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு 24 மே மாதம் மாலை 5 மணிக்கு கோடை முகாம் நிறைவு விழா ஜோலார்பேட்டை அத்லெடிக் கிளப் பயிற்சியாளர்கள் சபரி குமார் மற்றும் ஜெய்சங்கர் இவர்களின் தலைமையில் நடைபெற்றது. கலந்து கொண்ட அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினர் முரளி துணை காவல் கண்காணிப்பாளர் சிறப்பு விருந்தினர்கள் சபரி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சிவப்பிரகாஷ், காவல் ஆய்வாளர் ஆனந்தன், சித்ரா மனோன்மணி, டாக்டர் சுரேஷ்குமார், பீஸ் கார்டன் ஏலகிரி மலை பள்ளி முதல்வர் சாந்தி பாலா டான்போஸ்கோ ஏலகிரி கல்லூரி ராம் குமார், திமுக நகர செயலாளர் அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



## முதல்வராக விஜய் பதவியேற்ற 13 நாட்களில் 30க்கும் மேற்பட்ட குற்றச்சம்பவங்கள்: நயினார் நாகேந்திரன் விமர்சனம்

சென்னை, மே.26-

முதல்வராக விஜய் பதவி ஏற்ற 13 நாட்களில் தமிழகத்தில் 30க்கும் மேற்பட்ட குற்றச்சம்பவங்கள் நடந்துள்ளதாக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தள பதிவில் அவர் கூறியிருப்பதாவது: தூயசக்தியா அல்லது தூங்கும் சக்தியா? திமுக எனும் தீயசக்தி நாங்கள் தான் என்று கூறிய விஜய் தமிழகத்தின் முதல்வராக பதவியேற்ற 13 நாட்களில் கொலை, பாலியல் குற்றம், கடத்தல், ரவுடியிசம், வன்முறை என கிட்டதட்ட 30க்கும் அதிகமான குற்றங்கள் நடந்துள்ளதை தினசரி செய்தித்தாள்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.



முந்தைய திமுக ஆட்சியில் தான் மக்கள் உயிர் பயத்துடன் ஒவ்வொரு நாளையும் கழித்தார்கள் என்று பார்த்தால், தற்போதைய தவெக ஆட்சியிலும் மக்களின் பாதுகாப்பு அந்தரத்தில்தான் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அதுசரி, திருடன் கையில் சாவி கொடுத்ததைப் போல, குற்றவாளிகளை எல்லாம் அமைச்சர் பதவியில் அமர்த்தினால் குற்றங்கள் எப்படி குறையும்? அரசைக் கண்டு குற்றவாளிகளுக்கு எப்படி பயமிருக்கும்? ஆட்சிக்கு வந்தவுடன் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை சரிசெய்து, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதை விட்டுவிட்டு, வித விதமான விளம்பரப் பரப்புரைகளிலேயே முதல்வர் கவனம் செலுத்திக் கொண்டிருப்பது அவரது அனுபவமற்ற ஆளுமையைத்தான் காட்டுகிறது.

அலுவல் பணிகளுக்கு வேண்டுமானால் கொஞ்ச காலம் அவகாசம் கோரலாம். ஆனால் சட்டம் ஒழுங்கு போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு அவசரகதியில் துடிப்புடன் செயல்பட வேண்டும் என்பதை முதல்வர் எப்போது தான் உணர்வார்? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது



## மாதனூர் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக நடைபெற்ற டாக்டர் புரட்சி தலைவர் எம் ஜிஆரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

திருப்பத்தூர், மே.26-

திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக நடைபெற்ற டாக்டர் புரட்சி தலைவர் எம் ஜிஆரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யும் நிகழ்ச்சி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜே.ஜோதி ராமலிங்க ராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளர் டாக்டர் க.பசுபதி வி.ஞி, அவர்கள் மற்றும் மாவட்ட துணை செயலாளர் ராஜேந்திரன், மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் டில்லி பாபு, ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சம்பத்குமார், ஆம்பூர் நகர கழக செயலாளர் மதியழகன், மாதனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வெங்கடேசன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மணி, மாவட்ட மீனவர் அணி செயலாளர் சங்கர், தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டல இணை செயலாளர் செந்தில்குமார், உதேந்திரம் பேரூராட்சி கழக செயலாளர் சரவணன், முன்னாள் தொகுதி செயலாளர் வெங்கடேசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் ,பொது குழு உறுப்பினர்கள், மாநில மாவட்ட/ ஒன்றிய/நகர/பேரூர் பிற அணி செயலாளர்கள், பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், கிளைசெயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி நிர்வாகிகள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள், கழகத்தின் அனைத்து நிலை பொறுப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், மகளிர்கள் இளைஞர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோவை, திருப்பூர் விசைத்தறியாளர்களுக்கு இழுத்தடிக்கப்படும் கூலி உயர்வு

கோவை, மே.26-

பல ஆண்டு காலமாக இழுத்தடிக்கப்படும் கூலி உயர்வு விவகாரத்தால், விசைத்தறியாளர்கள் சட்டப் பாதுகாப்புடன் ஒப்பந்த கூலி உயர்வை அமல்படுத்த வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் விசைத்தறி தொழிலை நம்பி, சுமார் 4 லட்சம் குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெற்று வருகின்றன.

1990ம் ஆண்டு முதல் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜவுளி உற்பத்தியாளர்கள் கூலி ஒப்பந்தம் செய்து வந்தனர். ஆனால், தற்போது ஜவுளி உற்பத்தியாளர்களிடம் உரிய கூலி வழங்கக் கோரி விசைத்தறி உரிமையாளர்கள் போராடும் நிலைமை உள்ளது.

இதுகுறித்து கோவை, திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்



சங்கத் தலைவர் பூபதி கூறியதாவது: கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 90 சதவீதம் சாதா விசைத்தறிகள் மூலம் கூலி அடிப்படையில் நெசவு செய்து வருகிறோம். ஜவுளி உற்பத்தியாளர்கள் கொடுக்கும் பாவு நூல் பெற்று, கிரே காடா துணிகள் உற்பத்தி செய்கிறோம்.

3 ஆண்டுகளுக்கு ஒருமுறை விலைவாசி உயர்வு, தொழிலாளர்கள் கூலி உயர்வு, மின் கட்டண உயர்வுக்கு ஏற்ப புதிய கூலி உயர்வை ஜவுளி உற்பத்தியாளர்கள், விசைத்தறியாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் ஏற்படுத்தி வருகிறோம். ஆனாலும், கடந்த 2011ம் ஆண்டுக்கு பிறகு ஒப்பந்தப்படி உரிய கூலி கிடைப்பதில்லை.

ஒப்பந்தப்படி கூலி உயர்த்தப்பட்டாலும், மார்க்கெட் நிலைமை சரியில்லை எனக் கூறி, பழைய கூலியே திரும்பத் திரும்ப வழங்கப்படுகிறது. கடந்த 14 ஆண்டுகளாக உரிய கூலிக்கு போராடி வருகிறோம். ஒரு மீட்டர் துணி நெய்வதற்கு ரூ.4 முதல் ரூ.6 வரை ரகங்களுக்கு ஏற்ப விசைத்தறியாளர்களுக்கு வழங்க வேண்டும்.

ஆனால் இந்த கூலியில் மீட்டருக்கு 25 பைசா முதல் 50 பைசா வரை குறைத்து வழங்குவதால், பல லட்சம் மீட்டர் துணி உற்பத்தியில் ஈடுபடும் விசைத்தறியாளர்களின் வருவாய் கடுமையாக பாதிக்கப்படுகிறது.

எனவே, உரிய கூலி உயர்வை ஜவுளி உற்பத்தியாளர்களிடம் இருந்து மாநில அரசு, மாவட்ட நிர்வாகங்கள் பெற்றுத்தந்தால் மட்டுமே இந்த தொழிலின் எதிர்காலம் பாதுகாக்கப்படும். ஜவுளி உற்பத்தியாளர்கள் நெசவு கூலியை குறைத்து வழங்கும்போது, அதன் முழு சுமையையும் விசைத்தறியாளர்களே ஏற்கும் நிலை உள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 20ம் தேதி கோவை, திருப்பூர் மாவட்ட ஆட்சியர்களால் அறிவிக்கப்பட்ட நெசவுக்கூலி ஒப்பந்தத்தை அமல்படுத்துவதில் ஜவுளி உற்பத்தியாளர்கள் சில இடங்களில் மறுத்து வருகின்றனர். சட்டப் பாதுகாப்புடன் ஒப்பந்தக் கூலியை அமல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விசைத்தறியாளர்கள் கூறும்போது, "தொழிலாளர்களின் சம்பள உயர்வு, உதிரி பாகங்கள் விலை உயர்வு, வாடகை உயர்வு, மின் கட்டணம், தொழிலாளர்களின் வீட்டு வாடகை உயர்வு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் விசைத்தறி தொழில் முடங்கியுள்ளது.

இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், வேறு தொழிலுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர். உரிய கூலியை பெற்றுத்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

## பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்: முதல்வர் விஜய்க்கு பிரேமலதா கோரிக்கை

சென்னை, மே.26-

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விஜய் தலைமையிலான அரசு இரும்புக்கரம் கொண்டு குற்றவாளிகளை அடக்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி, 62 வயதுடைய முதியவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் அந்தோணி ராஜ் என்கிற விவசாயி தற்கொலை செய்து கொண்ட சம்பவமும், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே குபேந்திரன் என்கிற 17 வயது சிறுவன் முன்விரோதம் காரணமாக நள்ளிரவில் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவமும் மக்களிடையே அச்சத்தை தயும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும் சென்னை ராயபுரத்தில் உள்ள ஆர்.எஸ்.ஆர்.எம் அரசு மருத்துவமனையில் பிறந்து 9 நாட்களே ஆன குழந்தை கடத்தப்பட்ட சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தொலைக்காட்சிகளை பார்த்தாலே கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, குழந்தைகள் மீதான குற்றங்கள் போன்ற செய்திகள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருப்பது தமிழகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை குறித்து மக்கள் மத்தியில் கடும் கவலையை உருவாக்கியுள்ளது.

"சிறு குழந்தைகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்துள்ளேன்" என்று பெருமையோடு கூறும் முதல்வர் விஜய், பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சட்டம் மற்றும் ஒழுங்கு, காவல்துறை நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, குற்றச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு இரும்புக்கரம் கொண்டு குற்றவாளிகளை அடக்க வேண்டும் என தேமுதிக சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இல்லை என்றால், "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்" செய்தால் பயனில்லை." என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.



■ மதுரை மாவட்டத்திற்கு வருகைதந்தஉயர்கல்வி துறை அமைச்சர் திரு.பெ.விஸ்வநாதனை அரசினர் விருந்தினர் மாளிகையில் மாவட் ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.

## மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய புதிய அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்

### அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, மே.26-

மின்னுற்பத்தியில் தன்னிறைவு அடைய கடந்த திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, புதிய அரசு இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.



இதுதொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் கடந்த சில நாட்களாக அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுகிறது.

இதனால், மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மின்வெட்டுக்கான காரணங்கள் குறித்து அரசுத் தரப்பில் கூறப்படும் காரணங்களை ஏற்க முடியாது.

தமிழகத்தின் மொத்த மின்தேவை 22 ஆயிரம் மெகாவாட்டாக உயர்ந்துள்ள நிலையில், 84 சதவீத மின்சார தேவைக்காக மத்திய அரசு மற்றும் தனியார் மின்நிலையங்களையே தமிழகம் சார்ந்துள்ளது.

சொந்த மின்னுற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்ய ஆகும் செலவை விட, பல மடங்கு அதிக விலை கொடுத்து தனியாரிடம் மின்சாரம் வாங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டம் அடைவதற்கும், மின்வாரியத்தின் மொத்த கடன் ரூ.2.50 லட்சம் கோடியை தாண்டியதற்கும் இதுவே முதன்மைக் காரணம்.

திமுக ஆட்சி கடந்த 2021ம் ஆண்டு பொறுப்பேற்றபோது, மொத்தம் 5,700 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் திட்டங்களை அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் இருந்தன. திமுக அரசு நினைத்திருந்தால், அனைத்து மின் திட்டப் பணிகளையும் நிறைவேற்றி முடித்து, உற்பத்தியை தொடங்கியிருக்க முடியும்.

ஆனால், அதிமுக ஆட்சியில் 90 சதவீத பணிகள் முடிவடைந்திருந்த வடசென்னை 3வது அனல் மின்நிலையத்தில் (800 மெகாவாட்) மட்டும்தான் கடந்த பிப்ரவரி மார்ச் மாதத்தில் வணிகரீதியான மின்னுற்பத்தியை தொடங்கியது.

மீதமுள்ள 4,900 மெகாவாட் திறன் கொண்ட மின்னுற்பத்தி நிலையப் பணிகள் இதுவரை முடியவில்லை. தமிழகத்தில் தொழில், பொருளாதார வளர்ச்சி எட்டப்பட வேண்டும் என்றால், மின்னுற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும்.

கடந்த ஆட்சியில் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதநிலையில், புதிய அரசு இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அனல் மின் திட்டங்களின் தற்போதைய நிலை என்ன. அவை எப்போது உற்பத்தியை தொடங்கும்.

புதிதாக என்னென்ன மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. கார்பன் சமநிலையை அடைவதற்காக தமிழகத்தில் எப்போது அனல் மின் உற்பத்தியை முடிவுக்கு கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பன உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பலத்த காற்றால் ராசிபுரம் மற்றும் பெரம்பலூரில் மின்கம்பங்கள் சேதம் மக்கள் அவதி

நாமக்கல், மே.26-

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நேற்று இரவு பெய்த மழையில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சேதமடைந்துள்ளன. ராசிபுரம் 6வது வார்டு ஹவுசிங் போர்டு பகுதியில் கார் சேதமடைந்தது. மேலும் அங்குள்ள மரங்கள் வேரோடு சாய்ந்தது.

சூறாவளி காற்றில் சாய்ந்த மின்கம்பங்களை மின்வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சரி செய்து வருகின்றனர். நேற்று பலத்த காற்றுடன் 11 செ.மீ அளவுக்கு மழை பதிவாகியுள்ளது. ராசிபுரத்தில் 4வது வார்டில் உள்ள வீடு ஒன்றின் சுவர் இடிந்து சித்ரா தேவி என்ற பெண் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே பெரம்பலூர் மாவட்டம் செட்டிகுளம் அருகே நேற்றிரவு பலத்த காற்றுடன் மழை பெய்ததில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சேதமடைந்தது. கடந்த 2 நாட்களாக வெயில் அதிகமாக இருந்த நிலையில் நேற்று மாலை காற்று வீசியதை தொடர்ந்து சுமார் 7 மணியளவில் மழை பெய்ததது. செட்டிகுளம் பகுதியில் 71 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

## "15 நாட்களில் 25 கொலைகள், 19 பாலியல் குற்றங்கள்... என்ன செய்யப் போகிறீர்கள் முதல்வரே?" உதயநிதி

சென்னை, மே.26-

"தமிழ்நாட்டில் கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் நடந்துள்ளது. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்க, முதல்வர் ஆக்கப்பூர்வமாக என்ன செய்யப் போகிறார் என்ற கேள்விக்கு அவர் நேரடியாக பதில் சொல்லி ஆக வேண்டும்" என சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழகத்தில் கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் என செய்திகளில் வந்த சம்பவங்கள் மட்டுமே இவை. மாற்றம், மாற்றம் என்று சொன்னவர்களின் ஆட்சியில், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு மாறி இருப்பதற்கு இந்த சம்பவங்களே சாட்சி.

கோவை சூலூர் சிறுமிக்கு நடந்த கொடுமையின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் விழுப்புரம் மாவட்டத்தில் மற்றொரு சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை நடந்திருக்கிறது. சூலூர் சிறுமியின் தாய்க்குச் சொல்லாமல் அவசரகதியில் உடல் எரிக்கப்பட்டிருக்கிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே சிறுவன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

மேலும், கோவையில் ஓர் இளம்பெண்ணின் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டு இருக்கிறது. முதல்வரின் சொந்த தொகுதியான பெரம்பூரில் போதைக் கும்பல் ஒன்று 13 வாகனங்களின் கண்ணாடிகளை உடைத்து அட்டூழியம் செய்துள்ளது. முதல்வரே, இது தமிழ்நாடா, உத்தரப் பிரதேசமா?

எங்கே போனது உங்க சிங்கப்பெண் அதிரடிப் படை? தேர்தலுக்கு முன்பு வீர வசனங்களை பேசிய முதல்வர் இப்போது ஏன் வாய் திறக்க மறுக்கிறார்? அதிகரிக்கும் குற்றச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சத்தில் தவிக்கும் போது, இன்று காலை கண்துடைப்புக்காக காவல் துறை அதிகாரிகள் கூட்டத்தை நடத்தி பொத்தாம் பொதுவாக அறிக்கை விடுவதை ஏற்க முடியாது.

நிலைமையின் தீவிரத்தை முதலில் அரசு உணர வேண்டும். பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்க, முதல்வர் ஆக்கப்பூர்வமாக என்ன செய்யப் போகிறார் என்ற தமிழ்நாட்டின் கேள்விக்கு அவர் நேரடியாக பதில் சொல்லி ஆக வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## தவெகவினர் அதிகார வெறியாட்டம் பற்றி முதல்வர் விஜய் பேசுவாரா? இபிஎஸ் கேள்வி

சென்னை, மே.26-

"முதல்வர் கோட்டைக்கு வருகிறார், கேரியரில் மதிய உணவு சாப்பிடுகிறார். ஆஹா என்ன ஒரு மாற்றம் என்று ஒரு தனி உலகத்தை இவர்கள் கட்டமைக்கும் வேளையில், தமிழ்நாடு ரத்தக்காடாக மாறி வருவது பற்றியும், தங்கள் கட்சியினர் பொறுப்புணர்வின்றி போடும் அதிகார வெறியாட்டம் பற்றியும் ஒருவார்த்தையாவது பேசுவார்களா?" என தமிழக முதல்வர் விஜய்க்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மதுரை கீழமாத்தூரில் 10ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த தவெக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகே 17 வயது சிறுவன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டதாகவும் வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

மேலும், தாம்பரம் அருகே கல்லூரி மாணவியை தவறான முறையில் பார்த்த தவெக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், திருவொற்றியூரில் நள்ளிரவில் மின்துறை உதவிப் பொறியாளர் வீட்டின் கதவைத் தட்டி அச்சுறுத்தி ஆளும் தவெகவினர் மிரட்டியதாகவும் செய்திகள் வருகின்றன.

மேலும் சேலம் மாவட்டம் ஓமலூரில் நேற்று மழை பெய்த நிலையில் பல இடங்களில் மழைநீர் சூழ்ந்திருந்தது. இன்று காலை ஓமலூரில் உள்ள ரயில்வே சுரங்கப் பாதையை காரில் கடக்க முயன்ற கணவன் மனைவி இருவரும் அங்கு தேங்கியிருந்த தண்ணீரில் மூழ்கி இறந்துள்ளதாக வரும் செய்திகள் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரயில்வே சுரங்கப் பாதையில் தேங்கிய மழைநீரை இந்த அரசு உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளாததால் இன்று நாம் இரண்டு விலை மதிப்பற்ற உயிர்களை இழந்துள்ளோம்.

சிறப்பான ஆட்சியை தருவேன், மாற்றம் கொண்டு வருவேன் என்று முதல்வர் வசனம் பேசினார். ஆனால் ஒவ்வொரு நாளும் விலை மதிப்பற்ற உயிர்களை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். இந்த பொய்க்கால் குதிரை ஆட்சியிலும் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. ஆளுங்கட்சி நிர்வாகிகளுக்கு மதுரை சம்பவத்தில் தொடர்பு இருப்பதாக செய்திகள் வருகின்றன. அதுபோக, ஆளுங்கட்சியினரின் மிரட்டல் அராஜகங்கள், குறிப்பாக அரசு ஊழியர்களை அச்சுறுத்தும் போக்கு என்பது தொடர்கிறது.

முந்தைய ஆட்சிபோல் தமிழகத்தில் இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல், செய்தியாளர் சந்திப்பே நடத்த முடியாத முதல்வர் தான் இப்போதும் வாய்த்துள்ளார். ட்விட்டர் மடைமாற்று அரசியலில் திமுக ஈடுபட்டது என்றால், இன்ஸ்டாகிராம் ரீல் மடைமாற்று அரசியலில் இன்றைய ஆளுங்கட்சி ஈடுபடுகிறது. அவ்வளவு தான்.

முதல்வர் கோட்டைக்கு வருகிறார்! கேரியரில் மதிய உணவு சாப்பிடுகிறார்! ஆஹா என்ன ஒரு மாற்றம் ?" என்று ஒரு தனி உலகத்தை இவர்கள் கட்டமைக்கும் வேளையில், தமிழ்நாடு ரத்தக்காடாக மாறி வருவது பற்றியும், தங்கள் கட்சியினர் பொறுப்புணர்வின்றி போடும் அதிகார வெறியாட்டம் பற்றியும் ஒருவார்த்தையாவது பேசுவார்களா?

உங்களுக்கு வாக்களித்த தமிழக மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை இருந்தால், அவர்களை காப்பாற்ற சட்டம் ஒழுங்கை சீர்செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுங்கள் என்று இந்த முதல்வரை வலியுறுத்துகிறேன்" என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## திமுக அதிமுக கூட்டணிக்கு பாஜக உதவியதா? மாணிக்கம் தாகூரை சாடிய தமிழிசை

தூத்துக்குடி, மே.26-

"திமுகவும், அதிமுகவும் இணைந்து பதவிக்கு வர பாஜக உதவி செய்ததாகக் கூறிய மாணிக்கம் தாகூரை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்ந்தையாகி வருவது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. பரிதவித்துக் கொல்லப்பட்ட செய்தியை சொல்லும்போது ஒரு காவல்துறை அதிகாரி சிரித்துக் கொண்டிருக்கிறார்; ஒரு அமைச்சர் சிரித்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் என்ன உணர்வோடு இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

அதனால் புதிய அரசாங்கம் இன்னும் அதிக விழிப்புணர்வோடு, எச்சரிக்கையோடு, மக்களுக்கு அதிக பாதுகாப்பு தரும் உணர்வோடு செயல்பட வேண்டும்.

மாணிக்கம் தாக்கூருக்கு எனது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு இருக்கும் பதவி ஆசையால் பின்வாசல் வழியாக ஒடிப் போய் பதவியில் ஒட்டிக் கொண்டீர்கள் என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். காங்கிரஸ் தனித்து நின்று வெற்றி பெற்று அமைச்சரானவது என்பது உலகம் இருக்கும் வரையிலும் வாய்ப்பில்லை.

திமுக மற்றும் மற்ற கட்சிகளின் தோளில் ஏறி வெற்றி பெற்றுவிட்டு, அதிமுகவும் திமுகவும் இணைந்து பதவிக்கு வர பாஜக உதவி செய்ததாக சொன்னதை வன்மையாகக் கண்டிக்கிறேன். முன்னர், பாஜக அரசு ஒரு வருடத்தில் கவிழும் என ராகுல் காந்தி பேசியிருக்கிறார். ஆனால் மீண்டும் மீண்டும் பிரதமராக மோடி தான் தேர்ந்தெடுக்கப்படுவார்.

தவெக அமைச்சரவையில் பங்கு பெற்றது எனக்கே பிடிக்கவில்லை என திருமாவளவனே சொல்கிறார். ஆட்சி அதிகாரத்தில் ஆசை இல்லையென்றால் வெளியில் இருந்து ஆதரவு கொடுத்திருக்கலாம். அமைச்சர் ஆகிவிட்டு, நாங்கள் இந்தக் கூட்டணியில் இருக்கிறோமா அல்லது அந்தக் கூட்டணியில் இருக்கிறோமா என எங்களுக்கே தெரியவில்லை என சொல்கிறார்கள்.

மக்கள் தவெகவுக்கு அறுதிப் பெரும்பான்மை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த அரசாங்கம் தினமும் ஆட்டம் காணும் அரசாங்கமாக இருக்குமோ எனத் தோன்றுகிறது" என்றார்.

## எடையளவு மோசடிகளைத் தடுக்க வேண்டும் : தமிழக அரசுக்கு நுகர்வோர் அமைப்புகள் வலியுறுத்தல்

நீலகிரி, மே.26-

தமிழகத்தில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கவும், சந்தையில் நடைபெறும் எடை மற்றும் அளவீட்டு மோசடிகளைத் தடுக்கவும், தற்போது தொழிலாளர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் எடையளவு கட்டுப்பாட்டு துறையை உடனடியாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் கொண்டு வர வேண்டும் என நுகர்வோர் அமைப்புகள் தமிழக அரசுக்கு விரிவான கோரிக்கை விடுத்துள்ளன.

இதுகுறித்து கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் மற்றும் பல்வேறு தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் இணைந்து, தமிழக முதலமைச்சர் மற்றும் உணவுப் பொருள் வழங்கு துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள கூட்டு கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது "தற்போது எடையளவு கட்டுப்பாட்டு துறை தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் நலத்துறையின் முதன்மை நோக்கம் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் தொழிற்சங்க விவகாரங்களைக் கவனிப்பதாகும். ஆனால், எடையளவு கட்டுப்பாட்டு பிரிவு லீகல் மெட்ராலஜி துறையின் பணியோ முற்றிலும் நுகர்வோர் சார்ந்தது. முரணான இந்த நிர்வாக அமைப்பால், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் தேக்கநிலை ஏற்படுகிறது.

குறிப்பாக பொதுமக்கள் அன்றாடம் சந்திக்கும் பல்வேறு பொருளாதார இழப்புகளுக்குச் சரியான கண்காணிப்பு இல்லாததே காரணம், எரிபொருள் மோசடி: பெட்ரோல் நிலையங்களில் இயந்திர அளவீடுகளில் செய்யப்படும் சிறு மாற்றங்கள் மூலம் வாகன ஓட்டிகளுக்கு நாள்தோறும் பல கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்துகின்றன. நகைக்கடைகளில் பயன்படுத்தப்படும் மின்னணு தராசுகளில் ஏற்படும் சிறு பிழைகள் நுகர்வோருக்குப் பெரும் பண இழப்பைத் தருகின்றன. பொட்டலப் பொருட்கள் விலை: அச்சிடப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு விற்பது மற்றும் பொட்டலங்களில் குறிப்பிட்ட எடையை விடக் குறைவாகப் பொருட்களை அடைப்பது போன்ற புகார்கள் அதிகரித்துள்ளன. அதுபோல காய்கறி மற்றும் மளிகைக் கடைகளில் முத்திரை இடப்படாத தராசுகளின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த இத்துறை நுகர்வோர் துறையோடு இணைக்கப்படுவது அவசியமாகிறது.

அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இத்துறை ஏற்கனவே நுகர்வோர் பாதுகாப்பு துறையுடன் இணைக்கப்பட்டு, தனி ஆணையரகமாக (Directorate of Legal Metrology) செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாக அந்த மாநிலங்களில் நுகர்வோர் புகார்கள் மீது 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்க முடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே எடையளவு கட்டுப்பாட்டு துறையைத் தொழிலாளர் நலத்துறையிலிருந்து பிரித்து, நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஒரு அங்கமாக மாற்ற வேண்டும். இத்துறைக்குத் தனி ஐ.ஏ.எஸ் (IAS) அதிகாரியைத் தலைவராகக் கொண்டு 'தனி ஆணையரகம்' உருவாக்கப்பட வேண்டும். மாவட்ட அளவிலான மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களுடன் இணைந்து லீகல் மெட்ராலஜி அதிகாரிகள் கூட்டாய்வு நடத்த அரசாணை வெளியிட வேண்டும். எடை மோசடிகள் குறித்து பொதுமக்கள் வாட்ஸ்அப் அல்லது செயலி மூலம் உடனடியாகப் புகார் அளிக்கும் வசதியை மேம்படுத்த வேண்டும்.

தமிழக அரசு இந்த நிர்வாகச் சீர்திருத்தத்தை மேற்கொள்வதன் மூலம், ஒரு சாமானிய மனிதன் தான் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் உரிய பொருளைப் பெறுவதை உறுதி செய்ய முடியும். என நுகர்வோர் அமைப்புகள் சார்பில் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளார்.



# திருப்பூரில் ஜனநாயக சமநீதி மக்கள் கழக ஆலோசனைக் கூட்டம்

## புதிய மாவட்ட செயலாளர்கள் அறிவிப்பு

திருப்பூர், மே.26-

ஜனநாயக சமநீதி மக்கள் கழகத்தின் ஆலோசனைக் கூட்டம் திருப்பூரில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் கழக வளர்ச்சி, உறுப்பினர் சேர்க்கை இயக்கம் மற்றும் மக்கள் நலப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் முக்கிய அம்சமாக புதிய மாவட்ட செயலாளர்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டனர். அதன்படி, திண்டுக்கல் மாவட்ட செயலாளராக சுரேந்தர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட செயலாளராக மைதீன் நியமிக்கப்பட்டனர்.

கூட்டத்தில் கழக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். மேலும், கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்காக அனைவரும் ஒருங்கிணைந்து தீவிரமாக செயல்பட உறுதிமொழி ஏற்றனர்.

# உதகை அரசுமருத்துவ கல்லூரி நுழைவாயில் சாலை பகுதியில் சிதறி கிடக்கும் ஜல்லி துகள்களால் மருத்துவமனைக்கு வரும் வாகன ஓட்டிகள் பாதிப்பு

நீலகிரி, மே.26-

நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை நுழைவாயில் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு குழாய் நீர் இணைப்பு செய்திட தோண்டடப்பட்ட குழிகள் மூடப்பட்ட நிலையில் அந்த பகுதியில் கற்கள் பெயர்ந்து கிடப்பதால் மருத்துவமனைக்கு செல்லும் நோயாளிகள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமம் அடைந்து வருகின்றன நோயாளிகள் மற்றும் வாகன ஓட்டிகள்



நலனை கருத்தில் கொண்டு கற்களை சீர் செய்ய சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனெ சமூக ஆர்வலர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெற்ற சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 48 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன் (22.05.2026) அன்று வழங்கினார். உடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மு.கஸ்தூரி மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# பலாப்பழ சீசன் துவக்கம் : கிருஷ்ணகிரியில் சாலையோரங்களில் குவிந்த பலாப்பழங்கள் - பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்

கிருஷ்ணகிரி, மே.26-

தமிழகம், கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் பலாப்பழ சீசன் துவங்கியுள்ள நிலையில், பல்வேறு பகுதிகளில் பலாப்பழ விற்பனை சூடுபிடித்துள்ளது. இதனால் பொதுமக்கள் ஆர்வமுடன் பலாப்பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பகுதியில் திண்டிவனம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து லாரி மற்றும் சிறிய சரக்கு வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்ட பலாப்பழங்கள் சாலையோரங்களில் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பழுத்த மணம் வீசும் பலாப்பழங்களை பார்த்து வாகனங்களில் பயணம் செய்பவர்களும், பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.



ஒரு கிலோ பலாப் பழம் ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மேலும் ஒரு பெரிய பலாப்பழம் சுமார் 8 கிலோ முதல் 12 கிலோ வரை எடையுள்ளதாக கூறப்படுகிறது. இனிப்பு சுவை மற்றும் மணம் காரணமாக குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலாப்பழத்தை விரும்பி வாங்குகின்றனர்.

இதேபோல் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி உள்ளிட்ட கோடை சுற்றுலா தலங்களிலும் பலாப்பழ விற்பனை அதிகரித்துள்ளது. சுற்றுலா பயணிகள் சுவைத்து ரசிப்பதோடு, வீட்டிற்கும் வாங்கிச் செல்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது பலாப்பழங்கள் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளதால், சீசன் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

# மதச்சார்பற்ற சமூக நீதியே கழகத்தின் அடிப்படை கொள்கை: அமைச்சர் ரமேஷ் பேட்டி

திருச்சி, மே.26-

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் திருச்சியில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசுகையில், தங்களுடைய கழகத்தின் அடிப்படை கொள்கையே மதச்சார்பற்ற சமூக நீதி எனத் தெரிவித்தார்.



தங்களது தலைவர் சமூக நீதி மற்றும் சமத்துவத்தை முன்வைத்து இயக்கத்தை வழிநடத்தி வருவதாகவும் அவர் கூறினார். மேலும், சமூகத்தில் ஜாதி வேறுபாடுகளை ஒழிக்கப் பாடுபட்ட தந்தை பெரியார் மற்றும் இந்தியாவில் அனைவருக்கும் சம உரிமை கிடைக்க போராடிய அண்ணல் அம்பேத்கர் ஆகியோரை தங்களின் கொள்கைத் தலைவர்களாக ஏற்றுக்கொண்டு பணியாற்றி வருவதாக பெருமிதத்துடன் தெரிவித்தார்.

மேலும், தங்களுடைய இயக்கத்தில் மதம், ஜாதி, பணம், இனம், மொழி, பாலினம் உள்ளிட்ட எந்தவித பாகுபாடும் கிடையாது என்றும், “மக்களுக்கு சேவை செய்யக்கூடிய நல்ல மனநிலை மட்டுமே தகுதியாக பார்க்கப்படுகிறது” என்றும் அமைச்சர் ரமேஷ் கூறினார்.



# புழல் கதிர்வேடு ஸ்ரீகெங்கையம்மன் நாகாத்தம்மன் ஆலயத்தில் சித்திரை திருவிழா

மாதவரம், மே.26-

சென்னை புழல் கதிர்வேடு பஜனை கோயில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீகெங்கையம்மன் நாகாத்தம்மன் ஆலயத்தில் 23ம் ஆண்டு சித்திரை திருவிழா மறைந்த முன்னாள் புழல் ஒன்றிய குழு பெருந்தலைவரும் ஆலய தர்மகர்தாவான பர்ணபாஸ், முன்னாள் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வதனாபர்ணபாஸ் குடும்பத்தினர்கள் சென்னை மாநகராட்சி 23வது மாமன்ற உறுப்பினர் ராஜன்பர்ணபாஸ், 31வது மாமன்ற உறுப்பினர் சங்கீதா பாபு மற்றும் பிரேமலதாராஜன், தர்மலிங்கம், லட்சுமிதர்மலிங்கம், பாபு, கர்ணன், சவிதாகர்ணன் ஆகியோர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் பந்தக்கால்,காப்புக்கட்டுதல், பூங்கரகம் எடுத்தல், கணபதி பூஜை, லட்சுமிபூஜை, நவகிரக பூஜை, கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம், கலசநீர் அபிஷேகம் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இத்திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு திரைப்பட இன்னிசை கச்சேரி நடைபெற்றது.



# புள்ளிலையன் கிராமம் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் சித்திரை திருவிழா

மாதவரம், மே.26-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் புள்ளி லையன் ஊராட்சி குப்பாமணித்தோப்பில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீகெங்கையம்மன் ஆலயத்தில் 65ம் ஆண்டு சித்திரை திருவிழா ஆலய நிர்வாகிகள் மாதவன், புருஷோத்தமன், தனசெழியன், முத்து,லோகநாதன், கோதண்டன், கோவிந்தன், குருமூர்த்தி, சண்முகம், ராதாகிருஷ்ணன், சம்பத்குமார், தர்மலிங்கம், பாலாஜி, கணபதி, ஜெகதீசன், ஜெகன், ராகேஷ், ஜெயபால், சந்தானம், பிரகாஷ் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மனுக்கு பால், தயிர், இளநீர்,மஞ்சள், குங்குமம், பன்னீர், சந்தனம், தேன் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

அதேபோல் வாடை பொங்கல் வைத்தல், கெங்கை திரட்டுதல், பூங்கரகம் எடுத்தல் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இத்திரு விழாவை முன்னிட்டு பல்வேறு மன்றங்கள், சங்கம் சார்பில் அன்னதானம், குளிர்பானங்கள் வழங்கப்பட்டது இதணைத்தொடர்ந்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டுள்ள அம்மன் உற்சவருக்கு தீபாராதனை காண்பித்து மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.



# பழனியில் ஏ என் ஸ்போர்ட்ஸ் அகடாமி சார்பில் 14 வயதுக்கு உட்பட்ட தென்னிந்திய அளவிலான ஐவர் கால்பந்து போட்டி

திண்டுக்கல், மே.26-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் ஏ என் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்திய தென்னிந்தியா அளவிலான மாபெரும் ஐவர் கால்பந்து போட்டி நடைபெற்றது .

இதில் திண்டுக்கல், மதுரை ,தூத்துக்குடி, சேலம், ஈரோடு, கோவை, இடுக்கி மற்றும் தென்னிந்திய அளவில் 48 அணிகள் இந்த போட்டியில் பங்கேற்றது.

முன்னதாக இந்தப் போட்டியில் 8 வயது, 11 வயது, மற்றும் 14 வயதிற்கான பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் இந்த போட்டியில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினர்.

இப் போட்டியில் 14 வயது பிரிவில் ஏ என் ஸ்போர்ட்ஸ் அகாடமி பழனி முதலிடம் பிடித்துள்ளது. மன்னார்குடியைச் சேர்ந்த கலாம் அகாடமி இரண்டாம் இடத்தை பெற்றது. 11 வயதுக்கான பிரிவில் எஸ் எப் ஏ டி திருப்பூர் முதலிடமும் ,அன்னை ஸ்போர்ட்ஸ் அகாடமி இரண்டாம் இடம் பிடித்தனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற அனைவருக்கும் கோப்பைகள் மற்றும் பரிசுகள் பழனி தமிழக வெற்றி கழகம் சார்பில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திண்டுக்கல் மாவட்ட பொறுப்பாளர்கள் கார்த்திக் ராஜா ,சிவா மற்றும் பழனி பாலன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர். தொடர்ந்து ஏ என் ஸ்போர்ட்ஸ் நிர்வாகி அதிதி நிஷா அஸ்வினி மற்றும் பயிற்சியாளர் பாலாஜி ஆகியோர் அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

# தாராபுரம் தவெக இணைப்பு மற்றும் நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில் 500க்கும் மேற்பட்ட அதிமுகவினர் முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம்,தவெக மாவட்டத் தலைவர் யுவராஜ் ஆகியோர் முன்னிலையில் இணைந்தனர். காலியானது அதிமுக கூடாரம்

திருப்பூர், மே.26-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தவெக நிர்வாகிகள் அறிமுக கூட்டமும் அதிமுக நிர்வாகிகள் இணைப்பு கூட்டமும் தவெக மாவட்டத் தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற்றது அதிமுக முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம், ஆவின் பால் முன்னாள் மாவட்ட துணைத்தலைவர் சிவகுமார் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சியின் போது அதிமுக ஒன்றிய அவை தலைவர் கேபி ராஜு, முன்னாள் யூனியன் சேர்மன் பானுமதி, அதிமுக நகர பொருளாளர் சாமுவேல் உட்பட மீதமிருந்த 500க்கு மேற்பட்ட அதிமுகவினர் அக்கட்சியில் இருந்து விலகி தவெக உடன் இணைந்தனர், நடைபெற்ற கூட்டத்தில் எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் தங்கள் கட்சியிலான அடிமட்ட தொண்டர்கள்



போட்டியிட்டு அவர்கள் வெற்றி பெற அனைவரும் பாடுபட வேண்டும் என மாவட்ட செயலாளர் யுவராஜ் பேசினார், தாராபுரம் நகரில் என் என் பேட்டை வீதியில் உள்ள பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் டாஸ்மார்க் மதுபான கடையை அந்த குறை காண அமைச்சர் பொறுப்பினை ஏற்று 2 நாட்களே ஆன நிலையில் இது குறித்து அவருக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவித்து பிரச்சினைக்குரிய டாஸ்மாக் மதுபான கடை அகற்றப்படும் இதே போல் பொது மக்களை பாதிக்கும் வகையில் எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் அது குறித்த தகவலை ஆதாரத்துடன் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க நாங்கள் துணை நிற்போம் என மாவட்டச் செயலாளர் யுவராஜ் செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்தார் அதிமுக ஒன்றிய பகுதிகளில் இருந்து 1500 க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தொண்டர்கள் ஏற்கனவே கே வி ராமலிங்கம் தலைமையில் கோபிசெட்டிபாளையத்திற்கு வாகனங்களில் நேரில் சென்று முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் கட்சியில் இணைந்தனர், தற்போது மீதமுள்ள நகர நிர்வாகிகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் இன்று அதிமுகவிலிருந்து கூண்டோடு விலகி விஜய் தலைமையிலான இக்கட்சியில் இணைந்தனர் இதன் மூலம் தாராபுரத்தில் அதிமுக கூண்டோடு காலியானது என இணைப்பு நிகழ்ச்சியில் முன்னிலை வகித்த முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம் கூறினார் இந்த நிகழ்ச்சியில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக இணை செயலாளர் ஷேக் பரீத் திருப்பூர் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் சொர்கம் ரமேஷ் தாராபுரம் தெற்கு நகர கழகச் செயலாளர் அபுத்தாஹிர் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161